**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | | Miscellaneous | : | |
| Preliminary Register | : | | Case No. | : | **S.C.50/2023** |
| Sessions | : | | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : **P.W. 6** |
| | Defence | : **D.W.** |
| | Court | : **C.W.** |

| **Name :** | ஐயப்பன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **25.07.2025**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூர் பாரதிதாசன் நகர் 2 வது தெருவில் இருந்தேன். இறந்த அன்று நான் பக்கத்து தெருவில் இருந்ததால் கூட்டமாக இருப்பது தெரிந்து நான் போனேன். அவருடைய அம்மா எனக்கு தெரியும். அப்போது ஆய்வாளர் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு எல்லாவற்றையும் எழுதி கொண்டார். அதில் நானும், என்னுடன் இருந்த பெரியவர் ஒருவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். வீட்டின் எல்லை மற்றும் அமைப்பை காண்பித்தார்கள். அங்கிருந்த ரத்தக்கரை படிந்த மண் மற்றும் படியாத மண் எடுத்தார்கள். பைப் போன்று எடுத்தார்கள். அதற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.2 ன் வீட்டில் என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. கூட்டாக இருந்ததை பார்த்து போனேன். போஸ்ட் மாட்டத்திற்கு பிரேதத்தை எடுத்து சென்ற பின்னர் நான் போனேன். அப்போது மணி சுமார் 11, 11.30 மணி இருக்கும். அப்போது வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் எனக்கு அ.சா.2 ஐ தான் தெரியும். வேறு தெரிந்தவர்கள் இல்லை. ஆய்வாளர் மற்றும் போலிசார் இருந்தார்கள். பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு முழுசாக ஞாபகமில்லை. காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து போலிசார் பார்வை மகஜர் தயார் செய்து என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. எழுதி இருந்ததில் கையெழுத்து வாங்கினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு ஞாபகமில்லை. என் முன்னிலையில் ஆய்வாளர் எதையும் கைப்பற்றவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து கைப்பற்றுதல் மகஜரில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.